www.padippakam.com

19/08/93 No:70

# நிலமாகி



வேலணையூர் பொன்னண்ணா

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# நிலமாகி

வேலணையூர்
பொன்னண்ணா

கவிதைகள்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# நிலமாகி

வேலணையூர்
பொன்னண்ணா

படிப்பகம்

www.padippakam.com

# NILAMAKI

By
**Velanaiyoor Ponnanna**

First Edition:
July: 1993

Publisher: Mrs. T. Thavamanidevi,
Møllevej, 7-J
7190 Billund
Denmark.


Printer: IMPRIMERIE **SELPO** inc.
9615, rue Papineau bureau 325
Montréal, (Qué.) H2B 1Z6
Tel.: (514) 389-5699
Fax: (514) 389-6137

Pages: 64

Art & Layout: Mullaiyooran,
Baunehøjen-35
3320 Skævinge
Denmark.

படிப்பகம்

ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும்-தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்



தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்

## சமர்ப்பணம்

துன்பத்திலும் இன்பம் கண்டு என் துயர்தனைப்போக்கிநின்று................ இடைநடுவில் எனைப்பிரிந்து இவ் வுலக வாழ்வு நீத்த என் அன்புத் தெய்வம் -என் அன்னைக்கும் உயி ரோடு வாழ்ந்தும் எம்முடன் உறவு கொள்ள முடியாது, அரசபடை சூழ்ந்து தன்னை அகதியாக்கிய நிலையிலும் ,பிறந்தமண்ணை விட்ட கல விருப்பமின்றி,சொந்தமண்ணி ல் அகதியாகி-உறவுக்காய் துடித்து நிற்கும் என் அன்புத்தெய்வம் என் தந்தைக்கும் ›இக்கவிமலரை இரு கரம் தொட்டெடுத்து அவர்கள் பாதங்களில் சமர்ப்பணம் செய்கின் றேன்.

வேலணையூர் பொன்னண்ணா

www.padippakam.com

## நினைக்கிறேன்

எனது இதயத்தில்
என்றும் நினைவில் நிறைும்
அன்புத் தெய்வங்களான
திரு.திருத்தொண்டர்
க.தில்லையம்பலம்
அவர்களையும்
திருமதிசெல்லமுத்து
தில்லையம்பலம்
அவர்களையும்
திரு.தில்லையம்பலம்
குமாரசாமி அவர்களையும்
இங்கு நினைவு கூருகிறேன்.

அன்புடன்
பொன்னண்ணா.

படிப்பகம்

## அணிந்துரை

இதுவரை தமிழில் பூத்த கவிதைகள் தமது ஆழத்திலும் பரப்பிலும் சமுத் திரங்களைத் துளி செய்துவிட்டன.
அவயவிக் கொள்கைமுதல் சமுதாயவியற் கொள்கைவரை எல்லாத் திறனாய் வுத்தத்துவங்களுக்கும் சிலசில நூற்றாண்டுகளை ஒதுக்கிக்கொடுக்கும் நெடுமையும்,பழமையும் கொண்டவை நம் கவிதைகள்.
இத்தகையதோர் கவிதைப்பிரவாகத்தில் நின்று, தாரத்தே பார்ப்போமாயின் சங்ககால யாப்புக்களான அகவல்,வஞ்சிகளிலேயே நமது ஈழத்துக்கவிஞர் களின் எழுத்தாணிகள் ஆழத்தடம் பதித்திருப்பதைக் காணலாம்.
பாரதிக்கவிஞனோடு தமிழ்க்கவிதைகள் பெற்றுவிட்ட திருப்பத்தையே பேசி ப்பேசி அலுத்துப்போன மேடைகள் மறுபடியும் தெம்பும் ,தினவுமெடுக்கத் தேவையான புத்தொளி தற்போதய நமது தாயகக்கவிதைகளில் தெரிகிறது. இவைகளோடு கைகோர்த்து புலம்பெயர்ந்தோர் இலக்கியங்களும் தற்போது ஓர் புதிய அணியாய் வீறுகொண்டுள்ளன.
அந்த அணியிலிருந்தே இக்கவிதைத்தொகுதியும் வெளிவருகின்றது.ஆத்ம த்தைக்கிறி பொன்னண்ணா எழுதியிருக்கும் வரிகளில் தாயகத்திற்கு தூதுவி டும் மேகத்தின் திரள்வை அவதானிக்கிறேன்."திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கம் செய்தல்வேண்டும்" என்ற பாரதியின் கூற்று,வெளிநாட்டவர்களுக்கு மட்டுமல்ல வெளிநாடுகளில் வதியும் நமக்கும் பொருந்தும்.
உங்கள் ஆதரவை இக்கவிதைத்தொகுதிக்கு இருப்புச்செய்துகொள்வீர்க ளென நம்புகின்றேன்.

டென்மார்க் 01.05.1993 கே.எஸ்.துரை

## பூவரசு வாழ்த்துகிறது

"வேலணையூர் பொன்னண்ணா"
இந்தப்பெயர் கவிதைகள்மூலம் பலநூற்றுக்கணக்கான வாசகர்களுக்கு அறிமுகமான பெயர்.கவிதைகள் பல வகை. கவிஞர்களும் அதுபோல். எழு தவேண்டும் என்பதற்காக எழுதுகிறவர்களைவிட எழுதவேண்டியதை எழு தியே ஆகவேண்டும் என்று துடிப்பவர்கள் எண்ணிக்கையில் மிகக்குறைவே. "நாம் எழுதுகின்ற ஒவ்வொருஎழுத்துக்களிலும் நமது தாயகவேட்கை மிளிர வேண்டும்அதுதமிழுக்காகதமிழர்க்காககுரல்கொடுத்துக்கொண்டிருக்கவே ண்டும்" என்பார் பொன்னண்ணா.அவ்வாறே அவர் கவிதைகளிலும் தமிழ் மணக்கும். தமிழர்தம் அவலங்களை களையெடுக்கவேண்டும் என்கிற ஒரு ஆத்மாவின் தேடல் இருக்கும்.இப்போது வெளிவருகின்ற அவரது கவிதைத்தொகுதிமுழுமையாய்அவரதுஉணர்வுகளைபிரதிபலித்துவிடாது. ஏனெனில் அவர் ஒரு கவிதைச்சுரங்கம்..எனினும் அவரது சீரிய இலக்கியப்பணியை இது இனம் காட்டும். இன்னும் அவரிடமிருந்து பலநூறு கவிமலர்கள் மலர்ந்து தமிழ்மணம் பரப்பவேண்டும் என்று பூவரசு இனிய தமிழ் ஏடு, அதன் ஆக்கதாரர்களுடனும் வாசகர்களுடனும் இணைந்து மனதார வாழ்த்துகிறது.

அன்பன்
இந்துமகேஸ்
(யேர்மனி)

www.padippakam.com

## வாழ்த்தும் வரிகள் சில

"கவிதை என்பது அலங்கரிக்கப்பட்ட சொற்களின் அணிவகுப்பல்ல.உள்ளத்தைக் கிழித்துக்கொண்டு ஓர் ஊற்றுப்புறப்படுகிறதே அதற்க்குப்பெயர்தான் கவிதை!

"உணர்வுகள் அலைபுரள,நுங்கும் நுரையுமாக கொப்புளித்துக்கொண்டு, பொங்கி நடந்து வருகிறதே அந்த நதிக்குப்பெயர்தான் கவிதை!" என்ற கவிஞர் மு .மேத்தாவின் வரிகளை,கவிஞர்களாக விரும்பும் இளம்கவிஞர்கள் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும்..ஊரில் இருந்து கிடைக்கும் கடிதங்களைக்கூட கலம்களாக (columns) பிரித்து எழுதிவிட்டு அவற்றையும் கவிதைகள் என்று தம்பட்டமடிப்பவர்களும் இன்று இல்லாமலில்லை.இவர்களிலிருந்து வித்தியாசமாய் கவிஞர் பொன்னண்ணாவிடமிருந்து "பொங்கி" நடந்துவரும் கவிதை நதிகளை அண்மைக்காலத்தில் ஐரோப்பாவிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகள்,பத்திரிகைகளிலும் படித்து ருசித்திருக்கிறேன்.

நான் "அரைக்காற்சட்டை " அணியும் இளமைக்காலத்திலேயே திரு.பொன்னண்ணா அவர்களை ஒரு மேடைப்பேச்சாளனாக அறிந்திருக்கிறேன்.என் கிராமத்து வயல் வெளிகளில் நடந்த பல அரசியற் கூட்டங்களில் அவர் பேச்சைக்கேட்டு ரசித்த ஞாபகம் இப்பொழுதும் என் நெஞ்சில் பசுமையாக இருக்கின்றது.அவரின் கவிதை நூல் ஒன்று அவர் வாழும் டென்மார்க் நாட்டிலிருந்து வெளிவரவிருப்பதாக அறிந்தபோது மிக்க மகிழ்ச்சிக்குரிய செய்தியாக இருந்தது.நூலில் இடம்பெறும் கவிதைகளைப் படித்திருக்காவிட்டாலும், அவர் எண்ண அலைகளை-அவர் உணர்வுகளை நான் அறிந்தவன் என்பதால் அவர் கவிதைகள் எதைக்கூறும் என்பது எனக்குத் தெரிந்தவைதான்.

தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து "முகவரி இல்லாத மனிதர்களாக " வாழந்துகொண்டிருக்கும் நமது மக்களுக்கு பொன்னண்ணாவின் படைப்புக்கள் புதியபாதை காட்டும் என்ற நம்பிக்கையுடன் அவரது முயற்சிகள் வெற்றிபெற வாழததுகினறேன.

-எஸ்.எஸ்.குகநாதன்
ஆசிரியர் "ஈழநாடு
பாரிஸ்.



படிப்பகம்

www.padippakam.com



## வாழ்த்துகிறோம்.

வெளிநாடுகளில் வாழ்கின்ற மக்கள் பொதுவிடையங்களிலஈடுபடுவதென்பது மிகவும் கஸ்டமானதொன்றாகும்.அதுவும் ஒரு தனிமனிதனாக நின்று ஒரு செயலை நிறைவேற்றுவதென்பது மிகமிகக் கஸ்டமாகும்.ஆனால் நண்பர் பொன்.தியாகராஜா அவர்கள்இதற்க்குவிதிவிலக்காக ஈழமக்களுக்காகவும ஈழதேசத்திற்காகவும் தமிழ்மொழிக்காகவும் தமிழக்கலாச்சாரத்திற்காகவும் தான் சிறுகச் சிறுகச்சேர்த்துச்சேர்த்து வைத்திருக்கின்ற பூமாலைகளான பாமாலைகளை கவிதைத்தொகுதியாக ஆக்கி வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள்முன் சமர்ப்பிக்கின்றார்.அவரது இம்முயற்சி வெற்றிபெறவேண்டுமென உலகத்தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் சார்பாகவும் உ.த.ப..இயக்க சுவிஸ் கிளை சார்பாகவும் வாழ்த்துகின்றோம்.

வணக்கம்
வாழ்க தமிழ்!

இவண்
செ.சுதாகரன்
உ.த.ப.இயக்கம்,சுவிஸ் கிளை 28.02.1993

## அணிந்துரை

"நிலமாகி" என்ற கவிதைத்தொகுப்பை,வெளியிட்டவர் பொன்.தியாகராஜா என்ற கவிஞர்."வேலணையூர் பொன்னண்ணா" என்ற புனைபெயரில் தாம் படைத்த பாடல்களைத் தொகுத்தது மிகமிக அரியபணியாகும். தாயகத்தைவிட்டுத் தப்பித்து வந்துவிட்டோம் என்று சோறும் சுகமுமே வாழ்வு என்று வீழ்ந்து கிடப்போரின் உணர்வுகளுக்கு உயிர்கொடுத்த பாடல்களிவை. தமிழீழப்பெருமை,எதிர்காலவிடியல்,தமிழன் உயர்வுகுறித்தும் எழுதியிருக்கிறார்.நாகரீகமோகத்தில் விழுந்துவிட்டமக்களை தட்டி எழுப்பும் கருத்துக்கள் இப்பாடல்களில் விதைக்கப்பட்டிருக்கின்றன.கனிவுடன் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

இக்கண்
இர.ந.வீரப்பன்
தலைவர்,உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்(தலைமையகம்)
மலேசியா.



படிப்பகம்

www.padippakam.com



## வாழ்த்துகின்றேன்

உலகெங்கும் தமிழ்மணம் வீசவேண்டும், தமிழ்மக்களின் தனித்தன்மையான கலாசாரம் பரவவேண்டுமென்று தமிழர்கள் பாடினாலும்,கூறித்திரிந்தாலும் இன்று உலககெங்கும் சிதறிச்சின்னாபின்னமாக வாழும் தமிழ்மக்கள் மொழி யையும் கலாச்சாரத்தையும் காற்றிலே பறக்கவிடுவதைத்தான் காணமுடிகி றது.ஆனாலும் ஒருசிலர் மட்டும்தான் எங்களின் மொழியையும் கலாச்சாரத் தையும் பேணிப்பாதுகாக்கப்பாடுபடுகின்றனர்.அந்த நல்ல உள்ளங்களிலே டென்மார்க்கில் வசித்துவரும் அண்ணன் பொன்னண்ணா அவர்களும் அடங்குகின்றார் ஈழதேசத்தையே மறந்து ஈழதேசமக்கள்படும் இன்னல்கள்,துயரங்கள், துன்பங்கள்மற்றும்அவலத்தைகளே தெரியாமல் நவ நாகரீக வெளிநாட்டு மோகத்தில் இன்பமாக உலாவிக்கொண்டு திரியும் மானி டர்கள் மத்தியில் ,எங்கள் தேசத்தை,தேசமக்களை, அவர்கள் படும் துன்ப ங்கள் துயரங்களை ,கஸ்டங்களை தன்னுடைய புரட்சி எழுத்துக்களால் கவி தைகளாக ஒவ்வொருவருடைய கண்கள்முன்னே படம்பிடித்துக்காட்டுகின் றார்.ஆகவே பொன்னண்ணாவினால் வெளியிடப்படுகின்ற "நிலமாகி" என்னு ம் இக்கவிதைத்தொகுதியானது வெளிநாடுகளில் வாழும் ஒவ்வொரு தமிழ் மக்களுடைய கைகளிலும் தவழவேண்டுமென்பதே என் அவா.அந்தவகையில் இந்தாழத்துப்புரட்சிக்கவிஞனின் முயற்சி வெற்றி பெற வேண்டும்,தொடர்ந்தும் கவிதையோடு மட்டும் நின்றுவிடாது இன்னும் பல நல்ல ஆக்கங்களை படைக்கவேண்டுமென்று ஈழமலர் சஞ்சிகை சார்பாக வாழத்துகின்றேன்.

நன்றி

வாழ்க!

வளர்க!!

அன்புடன்
எஸ்.சுதா
ஆசிரியர் "ஈழமலர்"
சுவிஸ்
01.03.1993



படிப்பகம்

www.padippakam.com



## கனவுகாணும் கவிதைகள்

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு நானும்,கவிஞர் சேரனும்,எமது வகுப்பு மாணவனும் கண்டியைப்பிறப்பிடமாகக்கொண்ட நண்பர் செல்வராஜாவும் கண்டிப்புகையிரதநிலையத்தில் புகையிரதவருகைக்காக காத்திருந்தோம். மலைசூழ்ந்த அந்தப்பகுயில் பசிய உயரங்களிடையே வெண்முகில்கள் அழகாக பதியும் அழகை இரசித்தபடி நின்றோம்.செல்வராஜா சொன்னான் "கண்டி அழகான இடம் " என்று ."இல்லை........இல்லை ......எனது ஊர் அளவெட்டிதான் அழகான இடம்" என்று மறுதலித்தான் சேரன்.அந்த உரையாடல் எனது மனதில் ஆழப்பதிந்தது.ஆனால் இன்று பிறிதொரு நாடொன்றில் நின்றுகொண்டு அதே விடையத்தை உரத்துக்குரல்கொடுத்து பாடும்நிலை வருமென்று நான் அன்று நினைக்கவில்லை.இன்று புலம்பெயர் இலக்கியத்தின் அடிநாதமாக அந்த அசைபோடல் இருந்துவருகிறது. இதற்கு இன்றையபுலம்பெயர் ஈழத்து எழுத்துக்கள் எதுவும் விதிவிலக்கானவையல்ல.

எது கவிதை என்பதிலும் இவன்தான் கவிஞன் என்கிற தேடல்,அங்கீகாரம் எல்லாவற்றையும் கடந்து இன்று புலம்பெயர் இலக்கியத்தின் ஒவ்வொரு சொற்களையும் பாதுகாத்துத் தொகுத்து வைக்கும் பணி எம்முன்னுள்ளது.இந்த முயல்வின் தொடர்ச்சியானது எதிர்கால சந்ததியொன்றின் தேவைவரை நீண்டுநிற்றல்வேண்டும்.அகதியான நிலைகளை அகதிகளே அறிவதற்குமட்டுமன்றி புலம்பெயர்ந்தோர் பற்றிய மதிப்பீடு ஒன்றை அவர்களது மன உணர்வுகள் பற்றியதான புரிந்துணர்வொன்றுக்கு ஓடியவர்கள் என்ற கறை சுமத்துகின்ற இன்றைய தாயகத்தின் எழுத்தாளர்களுக்கும் உதவுவதாக இருக்கும். புலம்பெயர் இலக்கியத்தின்,குறிப்பாக கவிதைகளின் பாடுபொருளாக பிடித்திருக்கும் அந்த சோகம் நிறைந்த அசைபோடலானது தமிழ் என்ற அக்கறை சார்ந்த தாகும்.

தமிழ் என்று யாராவது சொன்னால் உடனே கைதட்டிவிடும் மனமுடைய கவிஞர் பொன்னண்ணா அவர்கள் தமிழின் பழைய கவிதை வடிவமொன்றில் இந்த புதிய பாடுபொருளோடு வருகிறார்.ஒதுக்கிவைக்கமுடி யாத இந்த உணர்வுகளோடு இவரது கவிதை வாசனை பெற்றுத்தந்ததாக நான் கருதும் மரபுவழி அறங்கூறல் முறையும் இவரது கவிப்பொருட்களாக இருக்கின்றன.

அண்மைக்காலங்களில் இவரது கவியரங்கக் கவிதைகள் பலவற்றைப்பார்தத்தன்விளைவாக இவரது கவிதை நெஞ்சு வளம்பெற்று ஆழ்வதாக நினைக்கிறேன்.எல்லோர்க்கும் பொதுவாக இந்த அசைபோடலிலி ருந்து புதிய மேய்ச்சலுக்காய் எழுந்து நடக்க எமக்கொரு புல்வெளி வேண்டு மென்று தோன்றுகிறது.அதற்கு எல்லோரும் தயாராவோம்.

அன்புடன்
முல்லையூரான்

டென்மார்க்-1993.05.05



படிப்பகம்

## என்னுரை

என் அன்புக்குரிய வாசகப்பெருமக்களே!

வணக்கம்! நான் ஒரு புதியவன்,உங்கள்முன் வந்துள்ளேன் இந்தக்க விதைத்தொகுதியின்மூலம்,நீங்கள் கைகொடுத்து வரவேற்பீர்கள் என்ற நம்பி க்கையுடன் சில உண்மைகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள எண்ணுகிறேன்.நான் ஒரு பெரிய கவிஞனோ கம்பனோ காளிதாசனோ கண்ணதாசனோ அல்ல.நான் பிறந்த மண்ணில் ஏற்பட்டநிச்சயமற்ற வாழ்க் கை நிலையாலும் வெளிநாடு செல்பவன் பணத்தை அள்ளிக்கட்டுகிறான் என்ற எண்ணத்தாலும் பிறந்த நாட்டைவிட்டு வெளியேறி வந்து இன்று அன்னிய நாடுகளில் அகதிக்கடலில் மூழ்கிநிற்கும் நம்மினத்தவர்களில் நானும் ஒருவன்.

என் சொந்தமண்ணைவிட்டு வெளியேறி வந்த துன்பமும் தாயக மண்ணில் நம்மினம்படும் துன்பமும், நிச்சயமற்ற வாழ்க்கையும்வெளியேறிய ஒவ்வொருவர் உள்ளத்தையும் தொட்டுநிற்பது.நான் என் இனத்துக்காக என்ன செய்தேன் என்ற கேள்விக்குறியும்,இந்தக்கேள்விக்குறியின் உள்ளடக்கை யை என்னுள்ளம்கேட்டது இந்தக்கேள்வியே என்னை கவிதை எழுதவைத்தது.ஏதாவது எழுதுவோம் என்று என்பேனாவை எடுத்தேன்.

ஏதேதோ எழுதினேன் என் எழுத்துக்களைப்பார்த்த சில பத்திரிகைகள்,சஞ்சிகைகள் என்னுள்ளத்துணர்வின் ஆக்கங்களுக்கு ஆத ரவு தந்து பிரசுரித்து ஊக்கமளித்தனர்.அந்த ஊக்கமும் உற்சாகமுமே,உங்கள் கைகளில் இப்போ தவழந்து விளையாடிக்கொண்டிருக்கும் இந்த கவிதை மலர் தொகுதியாகும். இது கவிதை உணர்வு கொண்ட உள்ளங்களுக்கு வழி காட்டி உதவும் கைநூலாக மட்டுமல்ல தேசிய உணர்ச்சிக்குள் உள்வாங்கி உடைந்துபோன உள்ளங்களுக்கு உணர்வூட்டி நிற்கும்,தட்டிக்கொடுத்து உற்சாகமூட்டும். கையில் எடுத்தால் படித்துமுடிக்காது தூக்கம்வராது.
இந்த நம்பிக்கை ஏன் எனக்கு வந்தது என்று நீங்கள் கேட்கலாம். நானும் இன்று வெளிவரும் புதுக்கவிதைத்தொகுதிகள் பல படித்துமுடித்ததனால் இது ஏற்பட்டது.நான் கவிதை எழுதுவதற்கு கையாண்டுள்ள வடிவம். இன்றைய கவிதை உலகில் விமர்சனமாகலாம். ஆனால் உள்ளடக்கத்தில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். என் உள்ளம் எடுத்த இந்த கவிப்பயணத்தில் என்கரங்களில் வலுவுள்ளமட்டும் ஓயமாட் டேன்.என்பேனாவும் உறங்காது! ஓயாது! உங்கள் அன்பும்,ஆதரவும் என்னோடு உள்ளமட்டும்.

என் இந்தப்பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து உதவிசெய்த பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் ,எல்லாவற்றிற்கும் மேலாக இந்தக்க விதைத்தொகுதிக்கான வடிவமைப்பு வேலைகள் மற்றும் ஓவியங்கள் வரைந்து உதவிய என் அருமைத்தம்பி கவிஞர் முல்லையூரானுக்கும் அதுபோல் இக் கவிதை மாலைத் தொகுதியை அழகுற அச்சிட்டு உதவிய என் உதிரஉறவுக்கு உரம்போட்டு வளர்த்துவரும் அன்புமைத்துனர் திரு எஸ்.பி சாமி அவர்கட்கும் அவரின் அச்சக நிர்வாகிகள் ,ஊழியர்கள் அனைவருக்கும்,அணிந்துரை

www.padippakam.com



வழங்கிய ஆசிரியர் கே.எஸ்.துரை அவர்கட்கும்.மற்றும் வாழ்துச்செய்திகள் வழங்கிய இலக்கிய நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகூறி கடன் முடிக்க விருப்பமில்லை. என்றும் நான் என்னிதயத்துச் சுவர்களிலே இவர்களைத்தொங்கவிட்டு காத்திருப்பேன் கடமைக்காக நிச்சயம்.

அன்புடன்
பொன்னண்ணா
டென்மார்க்
1993.05.05



படிப்பகம்

www.padippakam.com







படிப்பகம்

www.padippakam.com



## குலதெய்வவேண்டுதல்

தவிடுதின்னி ஐங்கரனின்
தாழ்பணிந்து
பெரும்படை ஐய்யப்பன்
பெருந்துணையை வேண்டுகின்றேன்!
பெருங்குளம் தனிலுறைந்த
பேர்முத்துமாரியிடம்!-என்
கவிதை களில்
கரம்கொடுக்க வாவென்று!

## பெரும்படை ஐயப்பன் பாடல்

சீர்கொண்ட வேலணையின்
தென்திசைக் கோடியிலே
பேர் அலைகள்கொஞ்ச
பெருங்கடலின் அருகினிலே
பேர் ஆலம் மரத்தின் கீழ்
பெரும்படை தானும் கொண்டு
பேரருள் சுரக்கும் எங்கள்
சுவாமியே ஐயப்பா.......!சுவாமியே ஐயப்பா...!
சுவாமியே ......! ஐயப்பா.....!

பக்தர்கள் படைகொண்ட
பரம்பொருளே ஐயப்பா-எனை
பாரா முகமேனோ
பார்வதியின் கையப்பா!
பாலன் நான் உனைத்தினம்
ணேடியே நிற்கின்றேன்
பறந்தோடி வந்தென்னை
காத்தருள்வாய் ஐயப்பா!
காத்தருள்வாய் ஐயப்பா!!

என்கடன் உன்பணி
எல்லாமே உன்னருள்
பார்வதிபாலகா!
பரமசிவன் புத்திரா!
கந்தனின் தம்பியே!
கணபதியின் சோதரா!
மாயவன் மருகனே!
மறந்திடாதோடி வா!!
சுவாமியே ஐயப்பா!
சுவாமியே ஐயப்பா!!



படிப்பகம்

www.padippakam.com







படிப்பகம்

www.padippakam.com



**முதலகதி**

ஆண்டு எண்பத்தி ஒன்று - நான்
அன்றுதான் முதலகதி.
தெரிந்துநான் வரவில்லை....-ஆனால்
தெரிந்தபின்..................!!
ஏற்காமல் வாழ்வில்லை.......!
பார்த்திட்டேன் பரிஸ் நிலமை!
ஏற்றிட்டேன் அகதிநிலை!
மாற்றிட்டேன் எனை நானும்!

பாரினில் உயர்ந்த நாடு!
பிரான்ஸ் என்று அறிந்திருந்தேன்!
புரட்சி பல பூத்த நாடு......
புல்லரிக்கும் வளர்ச்சி நாடு....!
வாழவைக்கும் என்று எண்ணி,
வந்தேன் பிழைப்பை எண்ணி!-ஆனால்
அகதி ஆனாற்றான் ........
அடுத்து வரும் வேலை என்றார்

வட்டிலளவு அறை
வட்டமாய் பத்துப்பேர்
சுத்தி இருந்து போத்திலுடன்
சுதந்திரமாய் கதை அளந்தார்.
வாருங்கள் என்று......-எனக்கும்
வரவேற்பு தந்தார்கள்!
இரவு படுக்கைக்கோ........
இரண்டுபோய் எட்டு மிச்சம்..

எண்ணிவந்த எண்ணத்தில்-எனக்கு
இடிவிழுந்த கதையாச்சு.
கற்பனை கலைந்தாச்சு!
கனவுகண்ட நிலையாச்சு! - ஆனால்
கண்ணீரில் நனைந்த என்னை
வென்னீரில் குளிக்கவைத்த
**சோக்களற் பத்திரோன்**
சொர்க்கம் தந்த தெய்வமானார்.

ஊரில் உறவு சொன்னோர்
உதவிசெய்ய மறுத்துவிட்டார்
ஊர்தெரியா உருவங்கள் - என்
உளமறிந்து உதவிசெய்தார்.



படிப்பகம்

www.padippakam.com



சாதிமத பேதமெல்லாம்
சாக்கடைக்குள் வீசிவிட்டு
நல்ல உள்ளங்களைத்தேடி.......
நானும் இணைந்து கொண்டேன்.

**சில்வுப்பிளே தறுவாய்** சொல்லி
சிரித்துநின்றேன் பல கடை வாசல்களில்
**நெப்பா மொஞ்சே**,என்றுரைத்து ........
ஏறினேன் பல படிக்கட்டுக்கள்
**மெர்சி பொக்கு** என்று சொல்லி
மெய்தளர்ந்து திரும்பி வந்தேன்.
நம்பிக்கை நான் தளராது........
முயற்சிகள் பல செய்தேன்.
ஒருநாள்.........
இத்தாலி நாட்டு**பத்திரோன்**
இதமாக எனை அழைத்து
முத்தான வேலை ஒன்றை
முகம்பார்த்து எனக்களித்தார்-அதை
சொந்தாக்கிக்கொண்டு -மன
சுத்தமாய் பணிபுரிநது
சீட்டொன்றை நான்கட்டி-பணத்தை
சீர்படுத்தி வாழ்ந்துவிட்டேன்.

ஆண்டொன்று தான்செல்ல-**சோமாஸ்**
**அசைட்டிக்கும்** உதவிசெய்ய
என் குடும்பப்பணிமுடிக்க
என்மனமும் படம்பிடிக்க
ஏஜன்ரை நானணுகி
என்திட்டம்தான் சொருகி
அடுத்தடுத்த நாடுகளில்...........குடும்பத்தை
அகதியாய் மாற்றிவிட்டேன்.
என் குடும்பம்.......
ஸ்கன்டினேவியாவில்
கடைசிவரை அகதிநிலை.
இன்னும் நான் எண்ணுகிறேன்
இது சரியாவென்று!
தாயகத்து நிலை பார்த்தால்
தவறில்லை என்று எண்ணி
என்னை நான் ஆற்றுகிறேன்-பரம்பரையை
எது சொல்லி தேற்றிடுவேன்.
கண்ணீரில் நனைந்த என்னை
வென்னீரில் குளிக்கவைத்த
பிரான்ஸ் நாட்டு தலை நகராம்
பரிஸ் மா நகருக்கு
நன்றி பல கூறி
நானும் கவி முடிப்பேன்........
நன்றி செய்த உள்ளங்களை
நாளும் நான் நினைத்து.

முதலகதி என்ற கவிதையில்
வரும் சில பிரஞ்சுச்
சொற்களுக்கு
(தடித்த எழுத்திலுள்ளவை)
தமிழில்
அர்த்தம் தரப்படுகிறது.

சோக்கனற்-ஒரு ஸ்தாபனம்
பத்திரோன்-முதலாளி
நெப்பாமொஞ்சே-
சாப்பாட்டுக்கு
வழியில்லை
மெர்சிபொக்கு-மிக்கநன்றி
அசட்டிக்-வேலைவாய்ப்பு
திணைக்களம்
சோமாஸ்-வேலை இழப்பு,
பணக்கொடுப்பனவு



படிப்பகம்

www.padippakam.com

**எடுப்போமா**
**முடிவு ஒன்று!!**

நில்......!
தமிழா....!
நீ............!!
எங்கே செல்கின்றாய்?
போகும் பாதை சரியா?
புரிந்துதான் போகிறாயா?
இல்லை.......!
கண்காணும் பச்சை
கண்டு நீ போகிறாயா?-நாளை
உன்னைப்போல் உன்பிள்ளை
உலகமெல்லாம் அகதிதானா?-இல்லை
தாய்நாட்டு உணர்வுகொண்ட
தமிழனாய் வாழ்வானா?

தமிழா.....!
திரும்பிப்பார் கொஞ்சம் - உன்
தாய்வநாட்டின் சீரழிவை.
தாய்நாட்டில் தமிழர்படும்
தாங்கொணா வேதனையை.

நீ கற்றறிந்த கல்லூரி
காற்றில் பறக்குதடா!
நீ கும்பிட்ட கோவில்
நிலை குலைந்து தொங்குதடா!
நீ குடியிருந்த வீடு
நிலமாகிப்போனதடா!
குண்டுடைத்த அனர்த்தத்தின்
துண்டுகளை நீயும்பார்!!

உறவைப்பறிகொடுத்தோரின்
உரத்த கூக்குரலைக் கேள்!
கற்பை பறிகொடுத்த
கன்னியர் நிலையைப்பார்!
இத்தனையும் அங்கே.

இங்கே நீ
உன் பின்னால் பார்!
வெளிநாட்டு மோகத்தில்
வெளிக்கிட்டு இங்கு வந்து
பனி மூடும் வீதியிலே
தலை மூடி தான் நடந்து



படிப்பகம்

www.padippakam.com







படிப்பகம்

www.padippakam.com



உழைக்கிற பணத்தை
உதிரியாய் செலவுசெய்து

வெளிக்கொள்ளமுடியாத
வேதனையில் துடிக்கின்ற - சில
இளசுகளின் இதயத்தை
இதமாகத்தொட்டுப்பார்!

ஆசியாக்கரைதனிலே
அடிபட்டோம் - என்று
ஐரோப்பா தான் வந்தும்
அடிமையா? -என்று
அடிமடியில் பிடித்தபடி
அவர் உரிமை தான்கேட்டு - தமிழர்
காவியத்தில் இடம்பிடித்த
கரும்கூந்தல்தனைவெட்டி

ஆணா,பெண்ணா என்ற
அடையாளம் தெரியாது
ஆங்கில உடைபோடும்-நம்
அன்னையர் குலத்தைப்பார்!

இதுமட்டுமில்லை-துயர்
இருக்கிறது இன்னும்கேள்!!
ஆங்கிலம்தான் கலந்த
அழகான புதுத்தமிழை!
அன்றைய தமிழர் சிலர்
அவசரத்தில்பேசிவர
அதைக்கேட்ட நாமங்கே
அடியோடு வெறுத்து வந்தோம்.

ஆனால்
இன்றோ நிலைவேறு
இதயம்வெடிக்கிறது
பற்பல நாடுகளில்-அகதியென
பறக்கின்ற தமிழர்க்கு
பிறக்கின்ற பிள்ளைகளோ
படிக்கின்றார் பலமொழியை.
பலமொழியைப்படிக்கின்ற
பலமொழித்தமிழினம்
ஒருமொழியாய் தமிழ்மொழியை
தன் தாய்மொழியாய் ஏற்றிடுமா?



படிப்பகம்

www.padippakam.com



ஓரணி சென்றிடுமா?
ஒன்றுபட்டுநின்றிடுமா?
எமக்கில்லா தாய்நாட்டை
எடுத்திடத்தான் முடித்திடுமா?

எண்ணிட முடியவில்லை
எனக்கும்தான் புரியவில்லை.
பலநாட்டுத் தமிழரென
பழித்துரைக்க நினைத்துவிட்டால்!

சிங்கப்பூர்த்தமிழன்
சீனத்தான் அடிமையாச்சு!
மலேசியாத்தமிழன்
மண்டியிட்ட கதையாச்சு
தமிழகத்தமிழன்-டில்லிக்கு
தலைகுனிந்த கதையாச்சு-இன்னும்
எங்கெங்கோ தமிழர்
எல்லாம் அழிஞ்சாச்சு!
ஈழத்தமிழன்தான-இன்னும்
குறையுயிராய் இருக்கின்றான்.
அதுகூட நாளை
அழியும் நிலையாச்சு!
இன்னிலைக்கு வழிகாண
இன்னுமெம்மில் யாருமில்லை!
பச்சை நோட்டு தேடிடவே
பறக்கின்றார் நாடுவிட்டு நாடு

நிறுத்து நீ பயணத்தை
நில்! கொஞ்சம் திரும்பி வா!
இத்தனைக்கும் வழிதேட!
இன்று நாம் கூடிடுவோம்!
நாளுக்கொருவர்
நம்மோடு வந்திடுவார்
இத்தனைக்கும் விடிவு
எமக்கோர் நாடென்று
எடுப்போம் முடிவொன்று!

12.04.1989



படிப்பகம்

www.padippakam.com



## பொற்காலம்வந்திடுமா?
## தற்காலம் தன்னில் சொல்வீர்!!!

முற்காலம்
பொற்காலம்
தற்காலம்-என்று
முக்காலம் கண்டவர் தமிழர்.

முதற்சங்கம்
இடைச்சங்கம்
கடைச்சங்கம் -என்று
முச்சங்கம் கண்டவர் தமிழர்.

மூவேந்தர் கூடி
தமிழுக்கு
முடிசூடி மகிழ்ந்தவர்கள்
தமிழர்.

முல்லைக்கொடிபடர
தங்க
முடித்தேர் கொடுத்த
தங்கத் தமிழர் குலம் நம்குலம்.

வில்லு ,மீன்,புலி என்று
வீசிவரும் தென்றலிலே
அசைந்தாட
மூன்று பெரும் கொடியை
மொத்தமாய் தமிழுக்கு
சொந்தாக்கிக்கொண்டு
மூன்று பெரும் நாட்டினிலே
முடிசூடி வாழ்ந்த இனம்.

இத்தோடு இல்லை
இன்னும் இருக்கிறது.
பொற்கால வாழ்வுக்கு
புகழ்சொல்ல.

பெண்குலத்தின் பெருமைக்கு
பெருமைதரும் செயல்கள்
உலகுக்கு உணர்த்தவல்ல
உத்தமிகள் சரித்திரங்கள்.



படிப்பகம்

www.padippakam.com







படிப்பகம்

www.padippakam.com



கட்டியவள் காற்சிலம்பை
கழட்டித்தா! என்றதுமே
கண்விழிக்கும் நேரத்தில்
கழட்டிக்கொடுத்துவிட்டு

கணவனுக்காய் நீதிகேட்டு-மறு
காற்சிலம்பைத் தானுடைத்து-ஒரு
மாமன்னன் முடிஉடைத்து
மதுரையை எரித்தவளும்-நம்
மறத்தமிழர் இனம் தந்த
மானமுள்ள தமிழிச்சி
கண்ணகிதான் ஒரு
காவியநாயகிதான்.

தன்கணவன் போரில்
தானிறந்தான் என்றறிந்து
தன்பிள்ளைதனையழைத்து-போருக்கு
தானனுப்பிவைத்தவளும்.

தன்கணவன் சொல் தட்டாமல்
தன்தலையிலே சுமந்துசென்று
இன்னொருத்தி வீட்டு வாசற்படி
இறக்கிவைத்த நளாயினிபோல்

பதிவிரதை பலபேர்கள்
பெண்ணின் பெருமைக்கு
பெருமைசொன்ன காலமது!
அண்ணன் சொல் தட்டாத
அன்பு நிறை தம்பிமார்
தலைமையை மதித்து நின்ற
தன்னடக்கத்தொண்டர்கள்
எத்தனையோ எத்தனையோ!!

இத்தனையும் நடந்தது
இனிய பொற்காலமதில்.-அது
தற்காலம் தனில் வந்து
தமிழினத்தை காத்திடுமா?
கண்மூடித்தூங்குகையில்-சிலவேளை
கனவிலது நடந்திடலாம்.
ஒன்றுபட்ட தமிழினத்தை
ஒருவழியில் கண்டிடலாம்.



படிப்பகம்

www.padippakam.com



தற்கால தமிழர் நிலை
தான்சொல்ல முடிந்திடுமா?
தாயகத்தைவிட்டு
தப்பிவந்த தமிழர் நாம்
புலம்பெயர்ந்த தமிழர் என
புதுப்பெயரைக் கொண்டவர் நாம்!
அகதி அட்டைதனை அத்தாட்சிப்பொருளாக
சட்டைப்பைக்குள்ளே சரிபார்த்து வைப்பவர் நாம்!

சொந்த நாடின்றி-உலகமெலாம்
சுற்றித்திரிபவர் நாம்
சுதந்திரம் பற்றிச் சிந்திக்காமல்
சோசல் காசில்
சோம்பேறியானவர் நாம்!
உரிமைதனைக்கேட்டு
உயிர்கொடுக்கும் உத்தமரை
உள்ளத்தால் தானும் உணராது....

உண்டு உறங்கும்
உணர்வற்றோர் சிலரை
உள்ளடக்கிக் கொண்டவர் நாம்.
எதிரிப்படைசேர்ந்து
எம்மவரைக்கொல்லும்,
ஏழ்மைக்குரியோர்-இன்னும்
எம்மிடையே உள்ளவரை.

காவியத்தில் இடம்பிடித்த
கருங்கூந்தல் தனைவெட்டி
நாகரீகம் என்னும்
நதியில் குளிக்கின்ற-நவயுக
நளாயினிகள் உள்ளவரை
கட்டியவள் உண்டமீதி
கழிவென்று தள்ளிவைக்கும்
கலியுகக்கண்ணகிகள் -நம்
கண்முன்னே உள்ளவரை
தமிழிற்குபொற்காலம் வந்திடுமா

தற்காகம் தனில் சொல்வீர்...........!
தற்காலம் தனில் சொல்வீர்...............!!



படிப்பகம்

www.padippakam.com



ஐந்து லட்சம் கொண்டோர்
அகதியாம் கனடாவில்!
அதிற்கொஞ்சம் குறைந்தவர்கள்
அயல்நாடாம் இந்தியாவில்
வெளிநாட்டில் பிள்ளை கொண்டோர்
வெள்ளவத்தை கொழும்பு அகதிகள்
தன்கையில் காசில்லாதோர்
தமிழீழத்தில்தானகதிகள்.

தமிழனின் ஆட்சி
தன்னைக் காக்குமென-நம்பி
தாலிவிற்று வந்தவனை
தள்ளியே ஏற்றுது கப்பலில் -இதை
தட்டிக்கேட்க ஒரு தமிழனில்லை
தமிழர் தாயகம் என்ற .....தமிழகத்தில் என்றால்
தமிழர்க்கு பொற்காலம்............இது
தற்காலம் தனில்வருமோ??
சொல்வீர்....சொல்வீர்......சொல்வீர்..........

05.12.1993ல் கவியரங்கக்கவிதை



படிப்பகம்

www.padippakam.com



## ஏற்றபணி யார் தொடுப்பார்

ஈழத்தில் வாழந்தாலென்ன
ஈரோப்பா வாழ்ந்தாலென்ன
கண்டியில் வாழ்ந்தாலென்ன
கனடாவில் வாழ்ந்தாலென்ன
தமிழன் தமிழன் தானே!-அவன்
தாங்குவது துயரம்தானே!-இதை
மறுப்பவன் தமிழன்தானா?
மன்னிக்கும் மனிதன்தானா?

எதிரியின் குண்டுவீச்சில்
ஏங்கும் தமிழன் அங்கே
நாசிகள் குண்டு கண்டு
நடுங்கும் தமிழன் இங்கே
கங்காணி வரவு கண்டு
கலங்கிடும் தமிழன் அங்கே-தெரு
துப்பாக்கிச்சண்டை கண்டு
துடித்திடும் தமிழன் இங்கே.

உதிரத்தை உறையயவைத்து
உள்ளத்தை கல்லாய்வைத்து
உயிர்வாழும் தமிழா நீயும்
உன், பின்பக்கம் திரும்பிப்பாரு! -நம்
முடிகொண்ட மன்னர் மூவர்
முடிதுறந்த கதையைப்பாரு!-பின்னர்
தமிழ்காக்க வந்தோர்தானும்
தாம்பிரிந்த கதையைக்கேளு!

உண்மை மனதிலில்லை!
ஊருக்காய் வாழ்வு இல்லை!
நாட்டு நலன அவா மனதை
நாளும் தொட்டுப்பார்த்ததில்லை!
போட்டி பொறாமை என்றார்
போர்க்களத்தில் தானே நின்றார்.
தன்னினத்தை தவிக்கவிட்டு
தாம் பதவி பெற்று வாழ்ந்தார்!

ஒன்றுபட்ட வாழ்க்கையில்லை
ஒருகொடியில் நின்றதில்லை!
நேர்வழியில் செல்பவனை



படிப்பகம்

www.padippakam.com



நிலைத்திருக்கவிடுவதில்லை!
இந்தநிலை தானே இன்று-
எம்மவர்க்கு
வந்தவினை
என்றுசொன்னால்
எவர்மறுப்பார்,எவர்தடுப்பார்!!
ஏற்றபணி யார் தொடுப்பார்!!

ஒன்றுபட்டு முடிவெடுப்போம்!
ஒற்றுமைக்கு குரல்கொடுப்போம்!
அடம்பன் கொடியைப்போல
அணி ஒன்றாய் சேர்ந்திடுவோம்!!
எம்மினத்தின் துயரைப்போக்க
எதிரியை எதிர்த்து நிற்போம்.-அப்போ
தமிழர்க்கோர் சுதந்திர தாயகம்-நிச்சயம்
தப்பாமல் கிடைக்கும் நம்பு!.

08.05.1993

**அடுக்குமா இது**

தமிழகம் காக்குமென்று
தாலிவிற்று வந்தவனை
தள்ளியே ஏற்றுது கப்பலில்!
தமிழரின் ஆட்சி!

அடுக்குமா இது....
அநியாயம் இல்லையா?
தட்டிக்கேட்கவொரு
மனிதருமில்லையா!
இல்லை இது தடாவின் ஆட்சியா!!


10.11.1992



படிப்பகம்

www.padippakam.com







படிப்பகம்

www.padippakam.com



## தாய்நாடு

புறப்பட்டோம் புதுதேசம்
புரியாத ஒரு நோக்கில்.
பணத்தாசை மட்டுமே-மனதோரப்
பக்கத்தில் இடித்துரைக்க.......
ஆனால்
உறவுக்காய் அழுகின்றோம்
உள்மனதால் இன்று
பெற்றவரை,உடன்பிறந்தவரை
கண்டிடத்தான் முடியாமல்
உயிர்
அவலத்தை அகற்றிவிட்டோம்!
அகதியாய் மாறிவிட்டோம்!
பணத்தையும் சேர்த்துவிட்டோம்-தமிழர்
பண்பாடடை மறந்துவிட்டோம்.

அன்னியரின் வாய்க்கு
அவலாக மாறிவிட்டோம்!
தன்னினஉணர்விற்கு -சிலர்
தணல்மூட்டி எரித்துவிட்டோம்!
ஏ......தமிழா!
பஞ்சணைமெத்தை
பத்துக்காசுக்கு
பால்பழம்,முட்டை
தந்ததா சுகமெமக்கு-சொந்த
நாட்டைப்போல..............


13.05.1986



படிப்பகம்

www.padippakam.com







படிப்பகம்

www.padippakam.com



## ஈழம் நனையுதங்கே
## தமிழரின் குருதியாலே!

வானம் கறுக்கவில்லை
வருண பகவான் வரவுமில்லை
ஈழம் நனையுதங்கே
தமிழரின் குருதியாலே!

ஆறும் பெருகவில்லை-ஒரு
அணைக்கட்டும் உடையவில்லை
வெள்ளமாய் தமிழர் குருதி - ஈழத்து
வீதியெலாம் பாயுதடா!!

நாய் செத்தால் கூட, முறையாய்
நல்லடக்கம் செய்யுமினம்-இன்று
நாய் தின்னாப்பிணமாக
நடுத்தெருவில் கிடக்குதடா!

காற்றும் அடிக்கவில்லை-ஒரு
காக்கையும் பறக்கவில்லை!-அங்கே
செலிபோடும் குண்டு கண்டு-மக்கள்
கிலிகொண்டு ஓடுகின்றார்.

சூரியனும் மறைய வில்லை
சந்திரன் வரவு மில்லை
ஓடுகின்றார் மக்கள் எல்லாம்
ஒழித்திட பதுங்கு குழிக்கு

உண்ண உணவு மில்லை
உறங்கிடத்தான் வீடு மில்லை
தண்ணி ரில்லாக் காட்டில்
தவிக்குது தமிழர் கூட்டம்.

வீதிக்குப் போன மகன்
வீடுவந்து சேர வில்லை
படலையால் பார்த்த மகள்
பக்குவமாய் வீட்டி லில்லை!

பெற்றவர் புலம்பு கின்றார்-தாம்
பெற்ற பிள்ளை நிலைகண்டு.
ஆள்வோன் அலறு கிறான்-நாட்டில்
அமைதி கெட்டுப் போச்சுதென்று!



படிப்பகம்

www.padippakam.com



மானம் உயிர் என்று
வாழும் தமிழர் இனம்
தன்மானம் காத்தி டவே-இன்று
தனித்தும் போர் புரிகின்றார்!

ஆள்வோன் இதை உணர்ந்தால்-நாட்டில்
அடுத்தநாள் அமைதி வரும்!
அவன் உணரும் காலம்வரை
அமைதி எங்கு நாட்டில் வரும்!

12.02.1988





படிப்பகம்

www.padippakam.com



## பொறாமை

தன்முதுகில் சீழ் வடியும்
தானுமதை தான் அறியார்
மற்றவர் முதுகு.......மறு
மணக்கிறது என உரைப்பார்!

பட்டங்கள் பல பெற்றிருப்பார்-மக்களுக்கு
பயன்படுத்த மறுத்திருப்பார்.
நாயின் வால் தேன்போலே
நாட்டினிலே வாழ்ந்திருப்பார்!

மேடைதனில் ஏறார்.......மக்கள்
மேன்மைக்கு வழி சொல்லார்.-கற்றவர்
மேடைதனில் நின்று-மக்கள்
மேன்மைக்கு வழி சொன்னால்
மேதையா இவன் என்று
கேலி சொல்லி இகழ்வார்!

மண்ணுக்குள் வளங்கள் பல!-சில
மனிதர் இதை அறியார்!
மனிதருக்குள் சக்தி பல!-சில
மனிதர் இதை புரியார்!
எல்லாம் தெரிந்தவர்போல்-மற்றவரை
ஏளனங்கள் தான் புரிவார்!

மொத்தமாய் இத்தனையும்
சொத்தாக கொண்டவர்தான்
பொறாமையின் சின்னங்கள்
புரிந்திடுங்கள் புரிந்து நடந்திடுங்கள்.

பதவிக்கு ஆசை கொள்வார்!-அந்த
பக்குவத்தை அடையார்.
மற்றவர் வளர்ச்சி கண்டால்
மனம் பொறுக்க மாட்டார்!
வார்த்தையில் விசம் கலப்பார்
வசைமாரி பொழிவார்!


24.03.1993



படிப்பகம்

www.padippakam.com







படிப்பகம்

www.padippakam.com

## போர்த்துனை

தேரேறி வீதிவரா முத்துமாரி-
உன்
தேசநிலை கண்டிடம்மா
முத்துமாரி!
பாராண்ட உந்தனினம்
முத்துமாரி
பாரெல்லாம் அகதியம்மா
முத்துமாரி!

தேரோடும் வீதியெல்லாம்
முத்துமாரி-கொடிய
சீருடையார்
குவிந்திருக்கார்முத்துமாரி-
உனை
தோள் சுமந்த பக்தரெலாம்
முத்துமாரி-பயத்தில்
ஊர்மாறி சென்றுவிட்டார்
முத்துமாரி!

வேப்பிலைக்குள் மறைந்திருக்கும்
முத்துமாரி-தமிழர்
வேதனையை தீர்ப்பதெப்போ முத்துமாரி.
சிங்கத்தில் வீற்றிருக்கும் முத்துமாரி-
தமிழர்
சீரழிவை தடுப்பதெப்போ முத்துமாரி!

அகிலமெலாம் தமிழரினம் முத்துமாரி
அகதிநிலை மாற்றிடவே முத்துமாரி
புத்தரை போற்றிநிற்கும் சித்தருக்கு-நல்ல
புத்திமதி சொல்லிடம்மா முத்துமாரி!

தேவர்குலம் காத்திடவே முத்துமாரி
தேடியொரு வேல்கொடுத்தாய்
முருகனுக்கு
தமிழர்குலம் காத்திடவே முத்துமாரி-நீ
தட்டாமல் வேலெடம்மா முத்துமாரி!

பொறுத்தது போதுமம்மா முத்துமாரி-நீ
பொங்கியெழ வேண்டுமம்மா முத்துமாரி
பிள்ளைகள் துன்பம்கண்டு முத்துமாரி
பெற்றவள் பொறுப்பதுண்டோ முத்துமாரி!

தேரேறி மறுபடி வரவேண்டுமம்மா
தோள்சுமக்க தினவது நீ தந்திடம்மா!
தேர்க்கோலம் காணுநிறை நாள்வருமா?-
ஒன்றாய்
வடமிழுத்து வளம்வாழ வாழ்த்திடம்மா!

12.07.1992



படிப்பகம்

www.padippakam.com







படிப்பகம்

www.padippakam.com



# மேடைப்போலிகள்

பெண்ணடிமை இல்லையென்று
பேசுகின்றார் மேடையிலே
பேசிவிட்டு வீடு வந்து
பெண்டாட்டி தனையடிப்பார்!

சாதியில்லை என்று சொல்லி
சாடுகின்றார் மேடையிலே
சாடிவிட்டு வீடுவந்து
போத்தலிலே தேனீரை ஊத்துகிறார் வேலனுக்காய்!

சீதனம் ஏற்படுத்தும்
சீரழிவைப்பேசுகின்றார் மேடையிலே
திருமணம் பேசிவந்தால்
தரும் சீதனம் என்னவென்பார்!

சாதிபேதம் எனக்கில்லை -நான்
சமபந்தி என்று சொல்வார்
சமபந்தி சென்றுவிட்டு-வயிறு
சரியில்லை என்று சொல்வார்!

தாய் தந்தை பெரும் தெய்வமென்று
பேசிடுவார்மேடையிலே
வீடுவந்து பெண்டாட்டி சொல்கேட்டு
பெற்றவரை இகழ்ந்திடுவார் வீட்டினிலே!

குடிகெடுக்கும் குடியென்று
கொக்கரிப்பார் மேடையிலே
வருவழியில் தவறணையில்
வாங்கிடுவார் தாவென்று தனக்கொன்று

இதுதானே நம்நாட்டில்
இருந்துவரும் நடைமுறைகள்
இதனாலே தானே
நாமின்று இந்தநிலை

மாபோலிகள் பேச்சில்
மயங்கியே போய்நின்றோம்.
விழிக்கின்ற நேரமதில்-அகதி
வெள்ளத்தில் அள்ளுண்டோம்!

நீந்த முயலுகின்றோம்
நீச்சலும் தெரியவில்லை.
கரைதனை தட்டுதற்கு-ஒரு
கலங்கரை விளக்குமில்லை!!

13.04.1992



படிப்பகம்

www.padippakam.com

## இன்றைய ஈழப்பெண்

நெல்விதைத்து நீர்பாச்சி
நிறையக்கதிரறுத்து
வயற்காட்டு வரம்பினிலே
வட்டிலிலே சோறுபோட்டு

வண்ண வண்ண சேலை கட்டி
வட்டமாய் கூடிநின்று
தேடிவரும் தென்றலுடன்
தெம்மாங்கு பாடிநின்றும்

கல்லூரிப்படிக்கட்டில்
கவனமாய் அடிபதித்து
கண்ணியத்தை கணக்கியலை-தமிழ்
கலைகளுடன் கற்றுணர்ந்த-இன்றைய

ஈழப்பெண்களங்கே
ஏந்திவிட்டார் துப்பாக்கி.
பாதை எல்லாம் கண்ணிவெடி
பரப்பிடவே துணிந்து விட்டார்.

பிணத்தருகே சுற்றி வந்து
புலம்பி அழும் பெண்களெல்லாம்
பிணங்களையே புரட்டிவிட்டு
புறப்பட்டார் களம்நோக்க.

அங்கு ஒரு தமிழிச்சி
தன்னின உணர்வின் மேலீட்டால்
தன்னையே குண்டாக்கி
தரணியையே அசத்திவிட்டாள்.

வீரத்தாய் சரித்திரத்தை
வீழ்த்துகிறாள் ஈழப்பெண்-கண்ணகிபோல்
காற்சிலம்பை உடைக்கவில்லை,-எதிரியின்
காவலரண் உடைக்கின்றாள்.

தொட்டிலை தேடிநின்றோர்
தோட்டாவை தேடுகின்றார்-நேற்று
சேலைகட்டி நின்றவளும்
சீருடைக்குள் மாறிவிட்டாள்.

26.12.1992



படிப்பகம்

www.padippakam.com



## நிச்சயம்

வானத்தில் வில்லு வந்தால்
மழை வரும் நிச்சயம்
வட்ட நிலா வானில் வந்தால்
ஒளி வரும் நிச்சயம்.

முல்லை மலர் பூத்திருந்தால்
வாசம் வரும் நிச்சயம்
முத்தமிழ் கற்றிருந்தால்
ஞானம் வரும் நிச்சயம்.

பள்ளியில் நீ படித்தால்
பரீட்சை வரும் நிச்சயம்
ஊக்கமாய் நீ படித்தால்
தேர்வில் வெற்றி நிச்சயம்.

கற்றவரை நீ மதித்தால்
கல்வி வரும் நிச்சயம்
பெற்றவரை நீ மதித்தால்
பெருமை வரும் நிச்சயம்.

உண்மைபேசி நீ வாழ்ந்தால்
உலகம் போற்றும் நிச்சயம்
ஊருக்கு உழைத்து வாழ்ந்தால்
உன்னுயர்வு நிச்சயம்.

சுத்தமாய் நீ வாழந்தால்
சுகமுண்டு நிச்சயம்
ஏழைக்கு உதவிசெய்தால்
ஏற்றம் வரும் நிச்சயம்.

சீருடையார் பிடித்தஇடம்
சீரழியும் நிச்சயம்
உண்பதற்கு தேடிவரும்
உலர் உணவும் நிச்சயம்
போட்டி இன்றி நாம் வாழ்ந்தால்-இனப்
போரில் வெற்றி நிச்சயம்
தாயகத்தை தேடிவரும்
சுதந்திரமும் நிச்சயம்.

13.10.92

www.padippakam.com



## ஏக்கத்தில்

நான் ஒரு குழந்தை
என்பெயர் எதிர்காலம்
நான்தான் கேட்கிறேன்
எனக்கேது பாதை?

நேற்றய பெரியவரை
நேற்று நான் கேட்டேன்
இன்றைய இளைஞனை
இன்றும் நான் கேட்கிறேன்

எவருமே பாதையை
எனக்குத்தான் சொல்லவில்லை
எட்டுத்திக்கையும்
எதிர்கொண்டு பார்க்கிறேன்!

பார்க்கின்ற பக்கமெல்லாம்
பயங்கர இருட்டு
கேட்கின்ற ஒலியெல்லாம்
ஓலமும் ஒப்பாரியும்!

ஓடிப்போய் வீட்டு
ரி.வி யை ப்போட்டால்
சோமாலி நாட்டு
சோகம்தான் வரும்.

செய்வதறியாது நான்
நிலையாக நிற்கிறேன்
நின்றபடியே நான்
நினைக்கிறேன் என்வாழ்வை.

அகதியாய் அம்மா
வெளிநாடு வந்திட்டா
அலைகிறேன் நானும்
அம்மாவின் பின்னால்.

எனக்கேது சொந்த நாடு
எனக்கேது சொந்தமொழி
கேட்கிறேன் நான்தினமும்
எங்குமே பதிலில்லை.



படிப்பகம்

www.padippakam.com



சுதந்திரம் கேட்க
சிந்தித்த மக்களை
பட்டினிபோட்டே
பதை பதைத்திடக் கொல்கிறார்.

உள்ளக்கண்ணாலே
உலகத்தை சுற்றியே
ஜனநாயகம்பேசும்
ஜனங்களை பார்த்திட!

ஊருக்கே உபதேசம்
எனக்கில்லை என்கிறார்
ஆயுதம் செய்பவர்
தாமதைவிற்றிட!

அகிலத்தில் ஒவ்வொரு
நாட்டிலும் ஊரிலும்
அதற்காய் ஒரு சண்டை
அவர்களே ஆக்கிறார்.

பிள்ளையை நுள்ளுறார் ஓடி
தொட்டிலை ஆட்டுறார்
நோகாமல் (ஆயுத)விற்பனை
நோக்கத்தில் வெல்கிறார்.

ஏதுமறியாத பாவிகள் என்
போன்றவர் ஏங்கிறார்!
வயிற்றிற்கு வழியின்றி
வாடியே சாகிறார்!

27.05.85



படிப்பகம்

www.padippakam.com



**உரமாக மாறடா!**

கோயிலும் இல்லை
கோபுரம் இல்லை
கும்பிடத்தானொரு
தெய்வமுமில்லை.

வீடுமில்லை
வாசலுமில்லை
வீதிக்குவரத்தான்
வழியுமேயில்லை.

பள்ளியில் பாடமில்லை
பசிதீர் உணவில்லை.
குழந்தைப் பால் மாவுமில்லை
வருந்து பிணிக்கு மருந்துமில்லை!

சொந்தநாட்டில்
சுதந்திரமில்லை
வந்த நாட்டில்
நாஜிகள் தொல்லை!

அகதிமுகாமில்
அனுமதியில்லை
அதுகிடைத்திடினும்
அது உறுதியுமில்லை.

வாழ்க்கையே துன்பமாய்
வாழ்ந்திடும் தமிழா
உன்னினம் வாழ்ந்திட
உரமாக மாறடா!

14.10.83



படிப்பகம்

www.padippakam.com

## யார் தவறு

பூவிழந்து பொட்டிழந்து
புன்சிரிப்பு தானிழந்து
கட்டியவன் தனையிழந்து
கண்வடிக்கும் தாய்
பெற்றெடுத்த பிள்ளைகட்காய்
பேதலித்த உள்ளத்துடன்
நாட்டின் ஒரு மூலையிலே
நாதியின்றி நிற்கும் அன்னையிவள்.

தவிக்கும் தன் பிள்ளைக்கு
தண்ணிக்கும் வழியின்றி
பசிக்கும் வயிற்றிற்கு
பசிதீர்க்க உணவின்றி
அன்னை மனம் துடிக்கின்றாள்
அவள் கண்ணீர் வடிக்கின்றாள்.
அவள் வடிக்கும் கண்ணீரோ.......
அவள் மடிப்பிள்ளை பட்டு
அவன் மனம் துடிக்கிறது,
அண்ணன் மனம் அழுகிறது.

தாயருகில் அமர்ந்திருக்கும்
தலைமகன் ஓர்விழியில்
தாயையும் தம்பியையும்
தன்னுருவில் காண்கின்றான்.
தன்னையே வெறுக்கின்றான்
தன்னுளத்தில் பதிக்கின்றான்
தன்பணியை தொடர்வதற்கு
காலமது கடந்துபோக
காளையவன் செல்லும்வழி
அன்னைக்கு அமங்கலத்தை
ஆர்கொடுத்தார் என்றறிந்து
ஏ.கே.நாற்பத்தியேழை
ஏன் தாங்கமாட்டான்?
தாங்குதல் அவன் தவறா?
தாங்கவைத்த ஆழ்வோர் தவறா?

13.10.92



படிப்பகம்

www.padippakam.com



## பெண்மை

அன்ன நடையும்
அழகு மயிற்சிகையும்
வட்டமதி முகமும்
தொட்டிழுக்கும் விழியும்

தக்காளி நிறமும் -இளந்
தளிர்போன்ற கரமும்
பண்ணிசைக்குரலும்-தமிழ்ப்
பண்பாட்டு உடையும்
இந்த
எட்டும் ஒருங்கிணைந்த
பட்டுவண்ண பூச்சிபோல்
பாவை ஒருத்தி
பருவம் அடைந்தாலும்
பாரைத்தானாண்டாலும்
பார்புகழ்தான் பெற்றாலும்
அறிவின் சிகரமென
அகிலத்தார் சொன்னாலும்
காளையொருவன்
கரம்பற்றவில்லையெனில்
பெண்மைக்கு மதிப்பேது!
பொன்னுலகில் வாழ்வேது!

15.10.92



படிப்பகம்

www.padippakam.com



**மறுவாழ்வு**

வெள்ளை சேலைகட்டி ஒருபெண்
வீதியிலே தான்வந்தால்
விதவையெனக்கூறி அவளை
விலத்திவைத்து செல்லும் -பெண்ணுலகே
உன்னை -நீ
எண்ணிப்பார்!
உன்நெஞ்சைத் தொட்டுப்பார்!

விதிசெய்த சதியாலே
விதவையாய் அவள்மாற-மறுவாழ்வு
வாழவழியிருந்தும்,அவளுக்கு -சமூகம்
வழிமறித்து நிற்பதுமேன்!

ஒருத்திக்கு ஒருத்தனென்று
உழுத்த கதைபேசி
எரிகின்ற அவள்நெஞ்சில்
எண்ணையை ஊற்றுவதேன்.
பதிநெட்டும் நிறையாத
பச்சிளம் கன்னிவாழ்வில்
காலத்தின் விளையாட்டால்
கட்டியவன் இல்லையென்றால்-சபையில்
எற்கமறுப்பதுமேன்?
ஏளனமாய் ஒதுக்குவதேன்.

இறப்போர்க்கு மறுபிறப்பு
இருக்கென்று நம்புவோர்
விதவைக்கு மறுவாழ்வு
விடியலில்லை என்பதுமேன்?
பெண்ணைப்பெற்றோரே!
பெண்ணுரிமை கேட்போரே.....
சிந்தித்து விழிபெறுங்கள்
சிக்கிரமாய் செயற்படுங்கள்!

5.5.90



படிப்பகம்

www.padippakam.com







படிப்பகம்

www.padippakam.com

## கிளாலிக் கொலையும்
## புதுமைப்பொங்கலும்

தமிழர் வயல் நெல்லை கொடிய
தரம் கெட்டோர் கொள்ளையிட
கிளாலிக் கடற்கொலையால்
கடலெல்லாம் குருதி பொங்கி
தமிழ்ழ வயலெல்லாம்
வழிந்தோடிபபயிர் மூட........
புது அரிசியின்றி
புதுப்பானையின்றி
புது ஆடையின்றி
கண்ணரில் பொங்கினார்
தமிழர் நெஞ்சில்,
வேதனை பொறுத்திடாது.

கோலமிட மாவும் இல்லை!
கொதிக்க வைக்க எண்ணையில்லை!
முற்றிய கரும்புமில்லை!
முக்கனிகள் ஏதுமில்லை!
முற்றத்து மாமரத்தில்
மூன்று இலை தானுமில்லை!
கிளாலிக்கொலையிரவில் மறைந்த
கதிரோனும் முகம்காட்டவில்லை!
என்றாலும்..................
குண்டுடைத்த வீட்டோட்டில்
கோலமதைப்போட்டார்.
இடிந்தசுவர்க்கல்லெடுத்து
சுற்றிவந்து பானைவைத்தார்!
அகதிமுகாமரிசிகொண்டு
அதிற்பொங்கல் தானுமிட்டார்!
கிளாலிக் கொலைகண்டு
முகம்காட்டாச் சூரியனை
கூவியழைத்தார்-எமக்கு
கொண்டு வா! விடியலென்று!
ஒளியைக்கொடுத்துவிடு -இன்றேல்
ஒருநொடியில் அழித்துவிடுவென்று
பொங்கினார்! படைத்தார்!
தமிழர்
பொலிவற்ற முகத்தோடு!
புதியதொரு துணிவோடு!!

18.01.93



படிப்பகம்

www.padippakam.com



## தமிழர் எங்கும் அகதிகளோ!

ஐந்தாறு காசு கொண்டோர்
ஐராப்பா கனடா அகதிகள்.
அதிற்கொஞ்சம் குறைந்தவர்கள்
அயல்நாடாம் இந்தியா அகதிகள்.
வெளிநாட்டுப் பணம்கொண்டோர்
கொழும்பு வெள்ள வத்தையகதிகள்.
அதுவுமில்லாதோர் -நம்
தாயக அகதிகள்தாம்.
எங்கோ......எப்படியோ.......
தமிழர் எல்லோருமகதிகளே!

சாதிக்கொடுமைகளும்
சமுதாயக் கெடுபிடியும்
ஏழை பணக்காரரென்ற
ஏற்றத்தாழ்வுகளும்
அடுத்தவர் துன்பத்தில்
அமைதி கொள்ள நினைப்பதுவும்
பதவி ஆசைகளும்-அன்னியர்
பாதம் தொழும் நிலையும்
தமிழரிடை உள்ளவரை-என்றும்
எங்கும் தமிழர் அகதிகளே!

20.02.92

www.padippakam.com



## கனவு நிசமாகி?

கும்மியடித்தார்கள்
கும்மியடித்தார்கள்
கொலுசுகள் குலுங்கிட
கும்மியடித்தார்கள்
கோவில்மணிகேட்டு
கும்மியடித்தார்கள்
குவலயம் கேட்டிட
கும்மியடித்தார்கள்!

எங்கள் தமிழினம்
மீண்டுமொருமுறை
ஆண்டிட வந்தது
ஆட்சியைப்பிடித்தது
ஆனந்தம் பொங்கிடத்
தமிழர்கள் கூடியே
ஆனந்தக்கும்மியடித்தனர்!
அகிலம் பூராவும்
அதனொலிகேட்டிடவே!!

ஐக்கியநாடுகள்
சபையினர் கூடியே
அன்னைத்தமிழுக்கோர்
கொடிதனை ஏற்றினர்!
பட்டொளிவீசியே
பறந்திடத்தமிழ்க்கொடி
பாசம்கொள் தமிழரும்-கூடி
ஆடினர் கும்மியே!

பட்டதுயர்களை
பாட்டாகமாற்றியே
பாடியதமிழரை
பார்த்திட்டோன் தாய்நாட்டில்.
அகதிகள்வாழ்வு
அகன்றதெனக்கூறி
அகிலத்தமிழரும்
ஆடினர் பாடினர்!
கூடியேநின்று கும்மியடித்தனர்!



படிப்பகம்

www.padippakam.com



கண் ணினை மூடி
அயர்ந்தபிவேளையில்
கற்கண்டுச் சுவையோடு
கண்டவிக்காட்சியை
கனவென நினைக்காது
கண்களை விழித்திட்டேன்.
விழித்தபின்பேதான்
விளங்கிட்டேன் கனவென்று!
ஆனால்.......
கண்டவை கனவில்
நிஜமானால்................?

07.06.1991

**தாயகத்தண்ணீர்**

அகிலத்துப்பழங்கள்
பிழிந்தெடுத்த இரசங்கள்
அத்தனையும் நான்குடித்தேன்.
அதன்சுவையும் நானறிந்தேன்
ஆனால
என்
தாயகத்து மணல்மேட்டு
தாழக்கிணற்று தண்ணிபோல்
தாகமதை தீர்க்கலையே!!! 09.01.93

**கடமை**

தாய்நாட்டில் தாயொருத்தி
எலும்பாக மெலிந்திருக்க
காலத்தால் பெற்றபிள்ளை
கருணையின்றி கடமை மறந்து
இங்கிருக்க........
பேதத்தாய் பெற்றமனம்
பிள்ளைமனம் நோகுமென்று
பேசாமல் அங்கிருக்க........
காலத்தாய் அவள்கதையை
காலனிடம் ஒப்படைத்த.......
கதையறிந்து பிள்ளையிங்கு கதறுவதேன்?
09.01.93



படிப்பகம்

www.padippakam.com



# கொள்ளிக்குப்பிள்ளை

பெற்றவர் மகிழந்தனர்
பெருமையும் கொண்டனர்
கொள்ளிக்குப்பிள்ளை
கொடுத்தது கடவுளென்று!

பிள்ளையும் வளர்ந்தான்
பள்ளியும் சென்றான்....
பள்ளியிற்பாடங்கள்
படித்தவன்வந்தான்!

பார்த்தவர் மயங்கிடும்
பருவமடைந்தான்
பெற்றவர் மனதினில்
பெரு மகிழ்வு தந்தான்.

கூட்டங்கள் கூட்டினான்
கொடிகளும் ஏந்தினான்
நாட்டு விடியலை
நாடியே ஏகினான்!

ஏங்கிடும் அம்மாவும்
தேடிடும் அப்பாவும்
கொண்டிட்டஆசையை
தீர்த்திடப்பிள்ளையும்
கொள்ளிக்கு குடத்துடன் வருவானா?

23.03.1992



படிப்பகம்

www.padippakam.com







படிப்பகம்

www.padippakam.com



**வந்திடு பொங்கலே!**
**சேதி புதியது தந்திடவே!**

பொங்கிடப்பானையில்லை
புதிரெடுக்க பயிருமில்லை
ஏங்கிடும் தமிழர்க்கு
சேதி புதியது தந்திடவே
ஓடிவந்திடு பொங்கலே!

சூரியனைப்பார்ப்பதற்கு
சுதந்திரமும் அங்கில்லை.
ஆகாய வீதியெல்லாம்
அலைகிறது கெலிகள்தாம்.
ஆனாலும் தமிழர் நெஞ்சில்
பொங்கலைத்தான் நினைக்கின்றார்!

முற்றிய கரும்புமில்லை
முக்கனிகள் ஏதுமில்லை
கோதுமை மாவுமில்லை
கொதிக்கவைக்க எண்ணையில்லை
மாமரத்துக் கொப்பில்
மாவிலை தானுமில்லை.-ஆனால்
கோலமிடமட்டும்
குண்டு விழுந்துடைத்த
துண்டு ஓடுகள் நிறையக்கிடக்கிறது.

சென்றாண்டு பொங்கலிட்ட
எம் தமிழர் வீடுகளும்
சீருடையார் விளையாட்டால்
சீர்கெட்டுப் போனதுதான் -என்றாலும்
பொங்கிடத்தான் நினைக்கின்றார்!

பொங்கலே வந்திடுக!
சேதி புதிதாய் தந்திடுக!!

25.01.1991



படிப்பகம்

www.padippakam.com



## சொல்லிவிடு சித்திரையே!

பிறக்கின்ற சித்திரையே-நீ
பிறந்தென்ன தமிழருக்கு
கொதிக்கின்ற உள்ளம் கொண்டார் தமிழர்
கோடியா கட்டிடுவார்........?
கோவிலுக்கா போய்வருவார்........?

பத்துமைல் எட்டவொரு-தீவகத்தில்
பத்தினியாள் தவிக்கின்றாள்
கட்டியவன் வழியின்றி-யாழ்நகரில்
கலங்குகின்றான்......
தன்மனையாள் கதியறிய!

பார்த்துவர அவன் சென்றால்
பட்டாளம் சுட்டுவிடும்.-இதனால்
உறவுகளோ யாழ்நகரில்
பெற்றவளோ தனியே தீவகத்தில்.

இறுதிக்கடன்கூட
இன்றில்லைப்பிள்ளைகளால்
இதுகூடப் பட்டாளம்
இட்டசட்டம் தானாச்சு!

இந்நிலையில் சித்திரையே-நீ
இங்கு வந்து என்னநலன்.........தமிழர்க்கு!
ஆனால்
உன்னை அரவணைக்கும்
உள்ளமற்ற அரசோர்க்கு
நீதிநிலைத்திட
மானிடர் நிம் மதிவாழ
சாந்திகள் உண்டாக்கி
சத்தியத்தை காக்கவென்று
சித்திரையே சொல்லிவிடு!

14.04.90



படிப்பகம்

www.padippakam.com



## வேலணைத் திருநாடு

வேலணைத் திருநாடு
வீர வாலிபர் வாழும் பொன்னாடு.
வேலணைத் திருநாடு-எங்கள்
வேலணைத் திருநாடு.

வற்றாத குளமாம் பெருங்குளத்தின்
வாய்க்கால் வழியே நீர் பாய்ச்சி
முத்தாக விளையும் நெல்மணியை-வியர்வை
முத்துடன் சேர்த்து வளர்த்திடும்
வீர வாலிபர் வாழும் பொன்னாடு.-எங்கள்
வேலணைத் திருநாடு.

செந்தமிழ் மொழியினை காத்திடவே-முன்னோர்
செப்பிய வழியினை தானேற்று
திருமறை,திருக்குறள்,முத்தமிழ் விழாக்களை
திறனுற நடாத்தி தமிழ் காக்கும்
வீர வாலிபர் வாழும் பொன்னாடு-எங்கள்
வேலணைத் திருநாடு.

தங்கத் தமிழ் மறையாம் திருக்குறளை
சங்க மமைத்து காப்போரும்
தன்னினம் விடுதலை பெற்றிடவே
தன்னுயிர் கொடுத்த மூத்தோரும்
அன்னியர் ஆட்சி அரசவையில்
அன்னைத்தமிழ்மொழி காத்தோரும்
அன்னைவீடாய்க்கொண்டவர்
சொன்னவழியினில் தமிழ்வளர்க்கும்
வீரவாலிபர் வாழும் பொன்னாடு-எங்கள்
வேலணைத் திருநாடு.

ஒன்றே குலம்
ஒருவனே தேவனென்று
ஓதியுணர்ந்து..........
உள்ளத்தால் ஒன்றுபட்டு
இந்து கிறிஸ்தவர் முஸ்லீம் அனைவரும்
ஒற்றுமையாக சேர்ந்து வாழும்
வேலணைத் திருநாடு
வீர வாலிபர் வாழும் பொன்னாடு-எங்கள்
வேலணைத் திருநாடு.

*1965 ம் ஆண்டு வேலணை வாலிபர்சங்க விழாவில் பாடிய கீதம்.*



படிப்பகம்

www.padippakam.com







படிப்பகம்

www.padippakam.com



## அம்மா சொல்வது

வெட்டவெளி வீதியிலே
கொட்டு பெரு மழையினிலே
தப்பியும் நீ போகாதே!
தலையிற் தொப்பி இல்லாமே!

சின்னச் சின்ன தூறலில்
சிறுகச் சிறுக நீ நனைந்தால்
நெஞ்சிற் சளி பிடிக்குமே!
நாசரித்துத் தும்முமே!

புல்லும் மண்ணும் நனையலாம்
பூவும் இலையும் நனையலாம்
சின்னப்பிள்ளை நீ நனைந்தால்
நித்தம் நித்தம் நோய் வரும்!

வான் சொட்டும் தண்ணீரே
வழிந்து மழையாய் வருகுது!
வையம்வாழ அது தானே
வகையும் செய்து தருகுது!

நன்மை செய்யும் மழைதானே
நமக்கு துன்பந்தர விளையுது!
நாமும் கொஞ்சம் சிந்தித்தால்
நாட்டு நலமும் நம்சுகமும்
நாளும் நமக்குக் கிடைத்திடும்!

22.12.1990



படிப்பகம்

www.padippakam.com



## மூலிகை

முதியோர் கருத்தும்
மூலிகை மருந்தும்
நல்வழி செல்லவைக்கும்!
நலமுடன் வாழவைக்கும்!

நல்ல ஆட்சியும்-மக்கள்
நலம்பெறும் சட்டமும்
மக்களை வாழவைக்கும்!
வாசனை ஊட்டிநிற்கும்!

பள்ளிப்படிப்பும்-நற்
பணியின் தொடர்பும்
பட்டத்தை பெற்றுத்தரும்!
பாரினில் உனை உயர்த்தும்!

விளையாட்டு விருப்பும்
விஞ்ஞான அறிவும்
வீரத்தை ஊட்டும்!-நல்
விவேகத்தைப் பெருக்கும்.!

நோயற்ற வாழ்வும்
நுண்கலையறிவும்
துடித்தெழவைக்கும்!
சுடர்விடத்துடிக்கும்!

தன்னின உணர்வும்
தாய் நாட்டுப்பற்றும்
தன்னையே மறக்கவைக்கும்!
தியாகத்தில் உயரவைக்கும்!

11.01.1990



படிப்பகம்

www.padippakam.com



## கண்மணி....நீ

கண்மணி நீயும்
கண்மணி நீயும்
உண்மைக்கு வாதாடு!-என்றும்
உரிமைக்குப்போராடு

அன்னையும் தந்தையும்
தெய்வமென் றெண்ணு-உன்
ஆன்றோர் வாக்கினை
வேதமென் றெண்ணு-உலகம்
பெருமை கூறும்
பிள்ளையாய் வளர்ந்து
பெற்றவர் வயிற்றினில்
பாலினை வாரு!

(கண்மணி......)

அன்னையர் நாட்டை
என்றுமே நேசி!
அகிலம்பூரா
அதன் புகழ் வாசி!
நாட்டுக்கு நல்லதை
நாளுமே யோசி
நாளும் அதை நீ
மக்கள் முன் வாசி!!

(கண்மணி)

கல்லில் சிலையாய் கல்வியைப்பேணு
கற்றவர் சபையில் உண்மையைப்பேசு
கடமை கண்ணியம் கருணை கொண்ட
கடமை வீரனாய் நாளுமே வாழு! (கண்மணி)

06.10.1991



படிப்பகம்

www.padippakam.com



## ஔவைப்பாட்டி

ஔவைப்பாட்டி-தமிழ்
அன்னைப்பாட்டி
இவர்தான் -தமிழ்
அன்னைப்பாட்டி
இவர்தான்!

அலைகத்தமிழில்-ஒரு
ஆத்திசூடி தனை
அள்ளித்தந்தவர் இவர்தான்!-நமக்கு
அள்ளித்தந்தவர் இவர்தான்!

கொன்றை வேந்த னென்ற
கொள்கை நெறி யொன்றை
கொண்டு வந்தா தமிழில்-நமக்கு
கொண்டு வந்தா தமிழில்!

நல்லவழி போக
நல்லபடி வாழ
நல்வழி தான் தந்தா-நமக்கோர்
நல்வழி தான் தந்தா!

தங்கத்தமிழ் முருகன்-நல்ல
தமிழை ரசிப்பதற்கே
சுட்ட பழம் கொடுத்தான்-ஔவைக்கு
சுட்டபழம் கொடுத்தான்!

அவரோ தட்டில் தமிழ் கொடுத்தார்!
அவரோ தட்டில் தமிழ் கொடுத்தார்!

கொடியது கொடியது
வறுமை கொடியது!
அதனிலும் கொடியது
இளமையில் வறுமை!
என்றே முழக்கமிட்டார்!-தமிழிலில்
நன்றே முழக்கமிட்டார்!

05.05.92



படிப்பகம்

www.padippakam.com



**ஓடிவாருங்கள்**

பிள்ளைகளே பிள்ளைகளே ஓடிவாருங்கள்!
பள்ளிசென்று படித்திடவே கூடிவாருங்கள்!
அரும்பொருளாம் கல்விதனை அள்ளிக்கொள்ளவே
அன்னை சொல்லை கேட்டுத் தினம் பள்ளி நாடுங்கள்!

கரும்பு தின்னும் மனத்துடனே
கணித பாடம் கற்றிடுங்கள்
சரித்திரங்கள் பல படித்து-புது
சரித்திரத்தை படைத்திடுங்கள்! (பிள்ளைகளே)

அன்னைமொழி படித்திடுங்கள்-அதை
அகிலம் பூராப்பரப்பிடுங்கள்
மற்றவர்கள் போற்றும்படி -நம்
முத்தமிழை கற்றிடுங்கள்! (பிள்ளைகளே)

வாழும் நாட்டு மொழிபடித்து
வளமுடனே வாழ்ந்திடுங்கள்!
அகிலச்செய்தி அறிந்திடவே
ஆங்கிலத்தை படித்திடுங்கள்! (பிள்ளைகளே)

மாலைநேரம் வந்தவுடன்
மகிழ்ந்து விளையாடுங்கள்!
உறவுகொண்டு விளையாடி
உண்மைபேசி வளர்ந்திடுங்கள்! (பிள்ளைகளே)

23.06.1992



படிப்பகம்

www.padippakam.com



## புறப்படுதம்பி

புறப்படு தம்பி நீயும்
புதைபோருக்கு கழத்தை நோக்கி!
தாயகம் மீட்கும் போரில்
தம்பி நிற்கிறான் உன்னை நம்பி!

ஆழ்பவன் படைகள் கூடி-தமிழ்
அன்னையின் துகிலுரிய-சிலதமிழ்
வீணர்கள் சேர்ந்து நின்று
வீசுகிறார் வெண்சாமரை!

இவர்களும் தமிழர்கள்தானாம்
இனவிடுதலை வீரர் தானாம்
கொதிக்குது தமிழத்தாய் நெஞ்சு
கொய்துவா! கொடியோர் சிரசு!

பதவியில் மோகம்கொண்டு
பாதகச் செயல் புரியும்
வஞ்சகர் அழிவு நாளை-நீ
வாளினால் களத்திற் சொல்லு!

காகிதப்பூக்களெல்லாம்-தம்மை
தாமரைப்பூவாய் மாற்ற-சேற்று
தண்ணீரில் விழுந்த கதை
தானடா இவர்கள் நிலை!

பண்ணையின் களனி நீர்-தானும்
பாலெனச் சொல்லிக்கொண்டால்
சன்னதி தான் வருமா?
சாமி பூசையற்சேர்ந்திடுமா?

தாயகம் மீட்கும் நம்பு-உன்
நம்பிக்கை தானேயென்றும்
செந்தமிழ் காக்கும் நம்பு-சீர்
சிறப்பினுன் உழைப்பினாலே!

14.04.87



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



எது கவிதை? எவன் கவிஞன்?
என்பதல்ல கேள்வி
எனது வாழ்வு கவிதையானதா!
இதுவே எனது கவிதை.

படிப்பகம்